முற்பகல் 10.25

(தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுடைய மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையிலேயும், அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலேயும் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. இன்றையதினம் எடுத்துக் கொள்வதாக இருந்த அலுவல்கள் நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

பேரவை மீண்டும் நாளை (1-3-1996) காலை 10.00 மணிக்குக் கூடும்.

2. வினாக்கள்-விடைகள்*

உடுக்குறியிடாத வினாக்கள்

(இணைப்பு-I) (விதி 51-இன் கீழ் உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாதவையாக மாற்றப்பெற்று அவற்றுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்டுள்ள விடைகளுடன் அவை முன் வைக்கப்பெற்றவை-பட்டியல்கள் 6 முதல் 8 வரை - இணைப்பு-I ஆக (169 ஆம் பக்கம் முதல் 330 ஆம் பக்கம் வரை) சேர்க்கப்பட்டுள்ளன.

3. கவன ஈர்ப்பு

(அனுமதிக்கப் பெற்று அவைமுன் வைக்கப்பெற்றவை இணைப்பு-II ஆக பக்கம் 331 முதல் 335 வரை அச்சிடப்பட்டுள்ளன.)

பின்னர், பேரவை முற்பகல் 10.26 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

81. வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையினரால் வெளியிடப்பட்ட 21-6-1975 ஆம் நாளிட்ட II(1)/CT & RE/685/75